தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1978 மார்ச், 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினுக்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தொழில்நுட்பக் கல்லூரி.

* **குறுகிய கால வினு 8—திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி (Industrial Training Institute)-ல் 'Trades' அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் 5,000-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வருவது அரசுக்குத் தெரியுமா? இப்படி 5,000-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வருவதில், டிராப்ட்ஸ்மேன் 16, மோட்டார் மெக்கானிக்ஸ் 16, ஒயர்மேன் 26, எலக்ட்ரோ பிளேட்டர்ஸ் 16, ஃபிட்டர் 28, வெல்டர் 24 என்று 126 பேர்கள்தான் எடுக்கப்படுகிறார்கள். ஆதலால் இன்னும் 250 பேர்களையாவது அதிகமாக இந்த ஆறு 'டிரேட்ஸ்'-லும் எடுக்க அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று மட்டும் குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் தற்போது இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம் மத்திய அரசினால் 1-11-1956 ஆம் ஆண்டு

மாநில அரசுக்கு மாற்றப்பட்ட பயிற்சி நிலையங்களில் ஒன்று. இப்பயிற்சி நிலையத்தில் 272 கைவினைஞர்களுக்கு கீழ்க்காணும் பொறியியல் தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. வரைபட வரைவாளர் (பொது) 32, மின்முலாம் பூசுதல் 32, கம்மியர் (மோட்டார் வாகனங்கள்) 32, பொருத்துநர் 64, பற்ற வைப்போர் (காஸ் மற்றும் மின்சாரம்) 48, மின் கம்பியாளர்கள் 64, ஆக மொத்தம் 272. மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்கு மேலாகவே இருக்கிறது.

கல்லல் பஞ்சாயத்து கணக்குகள்.

* குறுகிய கால வினா 9—திரு. ஓ. சுப்பிரமணியம: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லல் பஞ்சாயத்துக் கணக்குகள் பல ஆண்டுகளாக தணிக்கை செய்யப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) அப்படியெனில், அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பஞ்சாயத்துக் கணக்குகள் பல ஆண்டுகளாகத் தணிக்கை செய்யப்படாமல் இருப்பதைப்பற்றிய விவரத்தைக் கேட்டிருக்கிறேன். ஏற்கனவே வந்த ஒரு குறுகிய கால வினாவிற்கு, அந்தப் பஞ்சாயத்திலுள்ள ஒரு எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டை வேறொரு பஞ்சாயத்துக்கு விற்றுவிட்டதாகத் தகவல் கேட்டு, அதற்குப் பதில் சொல்லும்பொழுது அதை வாடகைக்குக் கொடுத்திருப்பதாக அன்றையதினம் அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். அப்படி வாடகைக்கு கொடுப்பது சட்டபூர்வமாக சரியா ? அப்படிக் கொடுத்திருந்தால் இவர்கள் கணக்கில் வரவு வைத்திருக்கிறார்களா ? நரியங்குடி பஞ்சாயத்தில் கணக்கு எழுதி இருக்கிறார்களா ? இது நடைமுறைச் சாத்தியமானது தானா ? அப்படியென்றால் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் இந்த முறை வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்வி தணிக்கையைப் பற்றியது. தணிக்கை முறையாக இதுவரையில் நடந்திருக்கிறது. முன்பு கேட்ட குறுகிய கால வினாவிற்கு ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.